விஷேட பதிப்பு

# முரசொலி

விலை ரூபா 2-50

25-10-1990

கடற்புலிகள் தீரமிகு சாதனை

# அதிவிசைப் பீரங்கிப்படகு மாமுனையில் இன்று தகர்ப்பு!

தமிழீழ விடுதலைப்புலிகள் இன்று அதிகாலை வடமராட்சி கிழக்கு மாமுனைக் கடலில் கடற்படை பீரங்கிப்படகு ஒன்றினைத் தமது அதிசக்தி வாய்ந்த கடற்கண்ணி வெடியில் சிக்க வைத்து அதனைத் தகர்த்து, சிதைவுறச் செய்துள்ளனர்,

இத்துணிகரச் சம்பவம் இன்று காலை 5 32 மணிக்கு ''செம்பியன் பற்றுக் கடல் பிராந்தியத்தில் மாமுனைப் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

இத்தாக்குதலினால் அதிவிசேடத் தாக்குதல் சாதனங்கள் பொருத்தப்பட்ட குறிப்பிட்ட படகில் இருந்த சுமார் இருபது கடற்படையினரும் உயிர் பிழைத்திருக்க வாய்ப்பில்லை என்றே கருதப்படுகின்றது.

கடற்புலிகள் வைத்த இக்கண்ணிவெடியால் குறிப்பிட்ட படகு கண்ணியில் சிக்கி சிதைவுற்றதனை

— மறு பக்கம் பார்க்க

## புலிகளின் ராணுவமதிநுட்பத்தை தளபதி ஒத்துக்கொள்கிறார்

விடுதலைப்புலிகளின் அதிநுட்பமான இராணுவச் செயற்பாடு இரண்டாம் உலக மகா யுத்தத்தில் பிரான்சு இராணுவத்தின் செயற்பாட்டுக்கு இணையானது என ஸ்ரீலங்கா இராணுவத் தளபதியே ஒப்புக் கொண்டுள்ளார். ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்கா கொழும்பில் சில தினங்களுக்கு முன்னர் நடாத்திய பத்திரிகையாளர் மகாநாட்டில் பகிரங்கமாகப்

— மறுபக்கம் பார்க்க

★ மாவீரர் தினத்தை முன்னிட்டு

## இறந்த போராளிகளின் குடும்பத்தினருக்கு கூட்டுறவுச் சங்கங்களில் வேலைவாய்ப்பு

மாவீரர் தினத்தையொட்டி இறந்த போராளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த படித்த இளைஞர்கள். யுவதிகளுக்கு கூட்டுறவுச் சங்கங்களில் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட விருக்கின்றன.

இன்று காலை திருநெல்வேலியில் இடம்பெற்ற கூட்டுறவாளர்கள் மகாநாட்டில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொருளாதாரரீதியாக பாதிப்படைந்த குடும்பங்களைச் சேர்ந்தகல்வி பயிலும் பிள்ளைகளுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை 5 வருடங்களுக்கு மாதா மாதம் கல்வியைத் தொடர உதவிப் பணமாக வழங்குவது என்ற தீர்மானமும் இங்கு எடுக்கப்பட்டது. (66)

## காவலூரில் சிப்பாய்கள் அட்டகாசம்: வீடுகளில்பொருட்களைத்திருடிவிட்டு கண்ணிகளைவிட்டுச்செல்கிறார்கள்

ஊர்காவற்றுறையில் நிலை கொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இங்குள்ள வீடுகளில் புகுந்து பெறுமதி வாய்ந்த பொருட்களை எடுத்துச் செல்வதாகவும்,பல வீடுகள் அவர்களினால் உடைக்கப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இராணுவத்தினர் தாம் செல்லுமிடங்களில்

— மறு பக்கம் பார்க்க

## மாமுனையை நோக்கி 'வீரசூரியா' விரைகிறது

மாமுனைக் கடலில் கடற்படைப் பீரங்கிப் படகு தகர்க்கப்பட்ட இடத்தை நோக்கி 'வீரசூரியா' என்ற பெரிய பீரங்கிக் கப்பல் விரைந்து கொண்டிருப்பதாக இன்று காலை எமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

'வீரசூரியா' தாய்க்கப்பல் தொண்டமானாறு கடற் பிரதேசத்தில் நங்கூரமிட்டிருந்

— மறு பக்கம் பார்க்க

## பேராதனையில் கோஷ்டி மோதல் ஒபயசேகர விடுதி மூடப்பட்டது

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மாணவர் கோஷ்டிகளுக்கிடையிலான கைகலப்பில் விஞ்ஞான பீட மாணவர் ஒருவர் கடுமையான காயங்களுடன் கண்டி வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

— மறு பக்கம் பார்க்க

## மேலதிக ரயில் சேவை நிறுத்தம்

வவுனியாவிலிருந்து காலை புறப்படும் ரயில்சேவை நிறுத்தப்பட்டு விட்டது.

பகல் 12, 30 மணிக்குப் புறப்படும் சேவையில் மாற்றமில்லை

கொழும்பு செல்லும் பிரயாணிகளுடைய தொகை குறைந்து விட்டதினாலேயே

— மறு பக்கம் பார்க்க

## பெனாஸிர் தோல்வியை ஏற்கிறார் முன்னணியில் ஜனநாயககூட்டணி



பாகிஸ்தான் பொதுத்தேர்தலில் தனது தோல்வியை முன்னாள் பிரதமர் திருமதி பெனாஸிர் பூட்டோ ஒப்புக் கொள்கிறார் என்று இன்று அறிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் சட்டப்பேரவைக்கான மொத்தம் 217 தொகுதிகளில் இன்று பகல் வரை அறிவிக்கப்பட்ட 178 தொகுதிகளில் இஸ்லாமிய ஜனநாயகக் கூட்டணி முன்னணியில் நிற்கிறது.

இஸ்லாமிய ஜனநாயகக் கூட்டணிக்கு 88 இடங்களும் பெனாஸிர் பூட்டோவின் மக்கள் கட்சிக்கு 38 இடங்களும் கிடைத்துள்ளன.

பெனாஸிர் பூட்டோ தன் தொகுதியில் வெற்றிபெற்றுள்ளபோதிலும் தனது கட்சிக்கு ஏற்பட்ட தோல்வியைஏற்றுக் கொண்டுள்ளார்.

எனினும் பெரும் வாக்கு மோசடியை இடைக்காலஅரசு செய்துள்ளது என அவர் குற்றம் சுமத்தினார்.

## தையிட்டியில் வெட்டிக் கொலை

தையிட்டிப் பகுதியிலிருந்து மயிலிட்டி கிராம நீதி மன்றப் பகுதிக்கு வந்த தையிட்டி வாசியொருவரை இராணுவத்தினர் வெட்டிக் கொன்றதாக அறியப்பட்டுள்ளது.

இவரது சடலம் அந்த இடத்திலேயே கிடந்ததாக அறிவிக்கப்படுகின்றது.

(ப-2)

## இன்று தகர்க்கப்பட்ட டோறா பீரங்கிப்படகு 850 குதிரைச் சக்தி அதிவேகம் கொண்டது

இன்று அதிகாலை மாமுனையில் வைத்து விடுதலைப்புலிகளினால் தகர்க்கப்பட்ட கடற்படைப் பீரங்கிப் படகு டோறா ரகத்தைச் சேர்ந்ததாகும் 42அடி நீளமுடைய இப்படகு 425 குதிரைச் சக்தி கொண்ட இரட்டை என்ஜின்களைக் கொண்டது.

சுமார் 20 படையினர் வசதியாக இருந்து பயணம் செய்யக்கூடிய இருக்கை வசதியும், தங்குமிட, சமையல் வசதிகளும் கொண்டது.இஸ்ரேலிய தயாரிப்பான இப் படகு மிக வேகமாகச் செல்லக்கூடியது. இந்த தரையிறங்கு விசைப் படகில் கலிபர் இயந்திரத் துப்பாக்கியும், ஷெல்களை ஏவும் கணன்களும் பொருத்தப்பட்டுள்ளன. இத்தகைய டோறா ரக சிறிய அதிவேக விசைப்படகுகளே இலங்கை கடற்படையின் ரோந்துப் பணிகளில் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. தாய்க் கப்பலைவிட்டு அதிகதூரம் சென்று ரோந்து சேவையில் ஈடுபடும் இப்படகுகள் நீர்குறைந்த தரைப்பகுதியிலும் வேகமாகச் செல்லக்கூடியவகையில் உருவாக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# புதிய தொலைக்காட்சி சேவையை மகாராஜா நிறுவனம் ஆரம்பிக்கும்

மகாராஜா நிறுவனம் புதிதாகத் தனியார் தொலைக்காட்சிச் சேவையொன்றை ஆரம்பிக்க அரசிடம் அனுமதி கோரியுள்ளது.

தொலைக்காட்சியில் 7-ம் இலக்க அலைவரிசையில் இச்சேவையை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளது.

முதலில் கொழும்பில் மட்டும் பார்க்கக் கூடியதாக இருக்கும் இச்சேவை மூன்று மாத காலத்தில் நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்படும்.

இத்தொலைக்காட்சிச் சேவைக்கான அனுமதியை வழங்க அரசு உத்தேசித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (1)

ஊர்காவற்றுறையில்

# இலங்கை வங்கியில் ராணுவமுகாம்; மக்கள் வங்கி தரைமட்டம்

ஊர்காவற்றுறைப்பகுதியில் தற்பொழுது ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டுள்ள போதிலும் இராணுவம் அவ்விடத்தில் நிலைகொண்டிருப்பதால் வழமையான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றன.

இப்பகுதியிலுள்ள மக்கள் வங்கிக் கட்டிடம் புல்டோசர் மூலம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளதாகவும், இலங்கை வங்கிக்கட்டிடத்தில் இராணுவம் நிலை கொண்டுள்ளதாகவும், இதனால் வங்கிச் செயற்பாடுகள் யாவும் பாதிப்படைந்துள்ளதாகவும், தெரிவிக்கப்படுகிறது.(70,74)

# காணிப்பதிவகப் பதிவேடுகள் உருக்குலைந்து அழிவுறும் நிலை

காணிப்பதிவகத்தின் பதிவேடுகள் மேலும் சேதமடையும் நிலைக்குள்ளாகி வருகின்றன.

காணி அலுவலகம் பல தடவைகள் இடம் மாற்றப்பட்டு வருவதினால் பல ஆண்டுகளுக்கு முற்பட்ட பதிவேடுகள் உருக்குலைந்த நிலையில் உள்ளன.

1987-ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இடம் பெற்ற இந்திய இராணுவ நடவடிக்கைகள் காரணமாக 1940-ம் ஆண்டுக்கு முற்பட்ட பதிவேடுகள் யாவும் முற்றாகச் சேதமடைந்ததுடன் அதற்கு பின்னர் உள்ள 3500 பதிவேட்டுப் புத்தகங்களில் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட புத்தகங்கள் காணாமல் போயும் சேதமடைந்தும் உள்ளன.

தற்போது வீடமைப்பு அதிகார சபையின் தனியாட்களுக்கான விடுதிகளில் வைக்கப்பட்டுள்ள மிகுதிப் பதிவேடுகளும் உரியமுறையில் பேணப்படாமையினால் சேதமடையும் நிலைக்குள்ளாகி வருகின்றன.

தற்போது வீடமைப்புச் செயலக மேல் தளத்தில் இவ் அலுவலகம் இயங்கிவருகின்ற போதிலும் வாகன வசதியின்மை காரணமாக இந்த ஆவணங்களை இங்குகொண்டு வந்து சேர்க்க முடியாமல் இருப்பதாக இவ்வலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (66)

# கிளிநொச்சியில் மூன்று ஆசிரியர்கள் முதலாம் தரத்திற்குப் பதவியுயர்வு

கடந்த வருடம் நடந்த இலங்கை அதிபர் சேவை முதலாம் தரம் பதவியுயர்வுப் பரீட்சையில் சித்தியடைந்த கிளிநொச்சிமாவட்ட ஆசிரியர்களின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ம.பத்மநாதன்(கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயம்), ப. அரியரட்ணம்(வட்டக்கச்சி மகாவித்தியாலயம்), க சின்னராஜா (அக்கராயன் மகாவித்தியாலயம்)

இவர்கள் மூவரும் தற்பொழுது கொத்தணி அதிபர்களாகக் கடமையாற்றி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ப-6)

## புலிகளின்...

புலிகளின் திறமையை ஒப்புக் கொண்டார்.

விடுதலைப்புலிகள் கோட்டை சூழலிலும், பலாலி முகாம் சூழலிலும் அமைத்துள்ள பங்கர்கள் மிகவும் பலம் பொருந்தியவையாகவும் நுட்பமான வையாகவும் உள்ளன இவை பிரஞ்சு இராணுவம் பயன் படுத்தும் 'மைக் இனோல்ட்லயன்' முறைக்கு இணையானவை எனவும் தளபதி ஹமில்டன் வஜசிங்கா தெரிவித்திருக்கிறார்.

## மாமுனை ...

தது. இக்கப்பலுடன் சேர்ந்து ரோந்துக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு வந்த நான்கு சிறிய பீரங்கிப் படகுகளில் ஒன்றே மாமுனைக் கடலில் இன்று காலை கடற்புலிகளினால் தகர்க்கப்பட்டிருந்தது.

பீரங்கிப் படகு தகர்க்கப்பட்ட இடத்தினை நோக்கியே வீரசூரியா விரைந்து கொண்டிருக்கிறது.

## அதிவிசைப்...

யடுத்து அக்கடற்பிராந்தியத்தில் நங்கூரமிட்டுள்ள வீரசூரியா' என்றகடற்படையின் பாரிய - கப்பல் ஸ்தலம் நோக்கி விரைந்ததனை அவதானிக்க முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக் கண்ணி வெடியினால் ஏற்பட்ட பேரோசை பல மைல்களுக்குக் கேட்டது. கட்டிடங்கள் வீடுகள் அதிர்ந்தன.

## கொழும்பில் ஒரு தேசிக்காய் எட்டு ரூபா

கொழும்பில் ஒரு கிலோ தேசிக்காய் 150/ க்கும் ஒரு தேசிக்காய் 8/- க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

சிறிய வெங்காயம் 40 ரூபாவாகவும், தேங்காய் ஒன்று நான்கு ரூபாவாகவும் தற்பொழுது விற்பனை செய்யப்படுகின்றது. (ப-27)

## வவுனியாவில் ..

காலை ரயில் சேவை நிறுத்தப்பட்டுவிட்டதாக ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன. (11,

## வீடுகளை...

பெருந்தொகையாகக் கண்ணி வெடிகளைப் புதைத்து விட்டுச் செல்வதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (24)

## பேராதனை...

இச்சம்பவத்தினைத் தொடர்ந்து ஹில்டா ஒபயசேகர விடுதி உடனடியாக மூடப்பட்டது.

மாணவர் விடுதியினை விட்டு வெளியேறிவிட வேண்டுமெனப் பல்கலைக் கழக உபவேந்தர் உத்தரவிட்டுள்ளார். (11)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கஸ்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 25-10-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

வடக்கிற்கு மண்ணெண்ணை எடுத்துவர

# தடை இல்லையென அதிகாரிகள் அறிவிப்பு ஆனால் இராணுவமோ விடுவதாகஇல்லை!

உயர் அதிகாரி அனுமதி அளித்தாலும் சிப்பாய்கள் விடுகின்றார்கள் இல்லை. இந்தநிலை தமிழ் வியாபாரிகளுக்கு ஏற்பட்டுள்ளது

கொழும்பு, அனுராதபுரத்திலிருந்து மண்ணெண்ணை வவுனியாவிற்கு பதிவு செய்யப்பட்ட தனியார் வர்த்தகர்கள் எடுத்து வர முடியும், இதற்கு எதுவித அனுமதிப் பத்திரங்களும் தேவையில்லை என்று வவுனியாவில் இராணுவ உயர்அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளைஇப்படி எடுத்து வரப்படும் மண்ணெண்ணையினை தடைமுகாம்களில் படையினர் அனுமதிக்கின்றார்கள் இல்லை.

அதற்கு அவர்கள் கூறும் காரணம் மண்ணெண்ணை வடக்கே வவுனியாவிற்கு வாகனங்களில் எடுத்துச்செல்வது என்றால் பாதுகாப்புப் படைகளிடம் அனுமதி பெற வேண்டும் என்பது.

இது இவ்வாறு இருக்க அனுராதபுரம், கொலன்னாவ பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலும் மண்ணெண்ணை பெறுவதற்கு சென்றால் பாஸ் இருந்தால் மட்டுமே எண்ணை தருவோம் என்கின்றனராம்.

சிரேஷ்ட இராணுவ உயர் அதிகாரி பாஸ் தேவையில்லை என்கின்றார்.

அனுராதபுரத்திலும்,கண்டி வீதியிலுமுள்ள படைத் தடைமுகாம்களில் பாஸ் கெடுபிடியுள்ளது. (11)

# பண முடங்கலைத் தடுக்க வவுனியாவில் விசேட ஏற்பாடு

முல்லைத்தீவில் வங்கிகள் இயங்காததால் ஏற்பட்டு வரும் பணப்புழக்க முடங்கலைத் தவிர்க்க சில ஏற்பாடு மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் நடவடிக்கையாக வவுனியா இலங்கை வங்கியிலும் கொழும்பு வங்கியிலும் கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பரீட்சார்த்தமாக முதலில் புதுக்குடியிருப்புப்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வவுனியா வங்கியில் காசோலைகளை மாற்றிக் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திலிருந்து உணவுப் பொருட்களை எடுத்து வந்து விற்பனை செய்கிறது.

இத்தகைய நடவடிக்கையால் உத்தியோகத்தர்கள் ஓய்வூதியர்கள் தமது சம்பளக் காசோலைகளை மாற்ற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது (38)

# விசர்நாய்க் கடிக்கு உள்ளூரில் மாற்று மருந்து கண்டுபிடிப்பு

உள்ளூர் மூலிகைகளைப் பயன்படுத்தி விசர்நாய்கடிக்கு பயன்படுத்தக்கூடிய மாற்று மருந்து ஒன்றை ஆயுள்வேத முறையில் வடபகுதியைச் சேர்ந்த வைத்தியர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார்.

இம்மருந்து 1987-ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு பரீட்சார்த்த முறையில் பயன்படுத்தப்பட்டது என்றும், இதனால் விசர்நாய்க்கடிக்குள்ளான ஐவரிற்கு பூரண சுகம் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜூன் மாதம் போர் ஆரம்பித்த நாளிலிருந்து இதுவரை சுமார் 12 பேர் விசர்நாய்க் கடிக்குரிய மருந்துகள் இன்மையால் இறந்துள்ளனர் என்பதும் கொழும்பிலிருந்து இதற்குரிய மருந்து அனுப்பப்படுவதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதே வேளை ஆயுள்வேத முறையில் வைத்தியம் பார்க்கும் சில வைத்தியர்கள் தமது பரம்பரை வைத்திய முறைகளை வெளிப்படுத்துவதற்கு போர்க்கால சூழலை முன்னிட்டு முன்வந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## அச்சுத்தாள் இறக்குமதித் தீர்வை குறைப்பு

பத்திரிகை அச்சுத்தாள் இறக்குமதி வரியை 50 சத வீதத்தில் இருந்து பத்து சத வீதமாக குறைக்கப்படவுள்ளது. இத்தகவலை நிதி ராஜாங்க அமைச்சர் ஹெரல்ட்ஹேரத் நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பத்திரிகைகளுக்கான அச்சுத்தாள்களுக்கு தட்டுப்பாடு என்ற கருத்தை அவர் மறுத்தார்.

## தராசுத் திருடன்

திருநெல்வேலியிலுள்ள கடையொன்றில் சன சந்தடி மிக்க நேரத்தில் பெரிய வட்டத்தராசு ஒன்றைத் திருடிக் கொண்டுவந்து அதை கல்வியங்காடு சந்தையில் விற்பனை செய்த சுமார் ஐம்பது வயதுள்ள திருடன் ஒருவன் பிடிபட்டான்.

எழுநூறு ரூபா விலைபேசி அந்தத் தராசை விற்றுவிட்டு சுமார் ஒரு மைல் தூரம் நடையைக் கட்டிவிட்ட இந்தத் திருடன் அடையாளம் காணப்பட்டு பின்னர் பிடிக்கப்பட்டு விசாரணைக்காக கூட்டிச் செல்லப்பட்டார். 35

## வன்னி எம்.பி.யின் பெஜீரோ மீட்பு

கொழும்பில் வைத்துக் கடத்தப்பட்ட வன்னி எம்.பி. இரா. குகனேஸ்வரனுக்கு உரித்தான பெஜீரோ ஜீப் உதிரிப்பாகங்கள் கழற்றப்பட்டு அநாதரவான நிலையில் நீர்கொழும்பில் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என ஊர்ஜிதப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவித்தன.

கடத்தப்பட்ட வாகனத்தின் சாரதியும், எம்.பி.யின் மெய்ப்பாதுகாவலரும் பொலிஸாரால் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகத்தெரிகின்றது.(11

## முதலுதவிபயிற்சி

முதலுதவிப்பயிற்சி வகுப்பு ஒன்று பூநகரி கறுக்காய்த்தீவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் உருத்திரபுரம் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்றது.

# தண்ணீரள்ளி விளையாடிய சிறுமி சிணற்றில்வீழ்ந்து பரிதாப மரணம்

சிறுபிள்ளைகளுடன் சேர்ந்து விளையாட்டு வாளி கட்டிக் கிணற்றில் தண்ணீர் அள்ளிய சிறுமி ஒருத்தி பாழ் கிணறு ஒன்றில் வீழ்ந்து மரணமானார்.

புங்குடுதீவு மேற்கு சங்கத்தாகேணி என்னுமிடத்திலுள்ள பொன்னையா-குமுதினி என்ற 5 வயதுச் சிறுமியே இவ்வாறாக மரணித்தவராவார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலையில் நடந்துள்ளது. (20)

# ஆசிரியர் தொலைக்கல்வி தேர்வு; தோற்றியோர் அனைவரும் சித்தி

யாழ். ஆசிரியர் பயிற்சித் தொழிற்கல்வி நிலையத்திலிருந்து தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி இறுதித் தேர்வுக்கு (1987 , 1989) ஆரம்பக்கல்வி, கணித விஞ்ஞானப் பிரிவுகளில் தோற்றிய சகல மாணவர்களும் சித்தியடைந்துள்ளதாக யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சையில் சித்தியடைந்த 1987 - 1989 மாணவர்களின் விபரம் வருமாறு-

ஆரம்பக்கல்வி நெறி:-

திருமதி ருக்குமணிதேவி பாலகிருஷ்ணன் (சுட்டிலக்கம் 6001) திருமதி காந்திமதி நாகராசா (6002), திருமதி சுகன்யா ஞானகோபால் (6003), திருமதி பாலசிவனேஸ்வரி மனோகரன் (6004), திரு. அருணாசலம் ஸ்ரீகாந்தன் (6005)

கணித விஞ்ஞான ஆசிரியர் பயிற்சி நெறி:-

தியாகராஜா சத்தியபாலன் (6007), திருமதி யோகராஜா கலாதேவி (6008), திருமதி கலைவாணி இலங்கைநாதன் (6009), திருமதி மனோன்மணி வசந்தநாதன் (6010),செல்வி சின்னத்துரை வசந்தகுமாரி (6011)

எமிலியானுல்பிள்ளை பிரான்சிஸ் ஜெயபாலன் (6012), சியாமினி குணரட்ணம் (6013), மேரி லூட்ஸ் டோமினிக் (6014), மகாலிங்கம் வில்சன் கோமகள் (6015), தம்பிராஜா சிவகுமாரன் (6016), சர்வேஸ்வரி சிறிகாந்தன் (6017). (ப-17)

# தற்போதைய மழையினால் மடு அகதிகள் பெரும் அவதி

மன்னார் மாவட்டத்தில் மடுப்பகுதியில் தஞ்சமடைந்திருக்கும் அகதிகள் அண்மையில் பெய்துகொண்டிருக்கும் பருவ மழையினால் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.

இவர்கள் தங்கியிருக்கும் வீடுகளின் நிலப்பகுதி கசிந்து ஈரமாகக் காணப்படுவதனால் அவ் வீடுகளில் இருக்க முடியாது அவதிப்படுகிறார்கள்.

இதேவேளை நுளம்புத் தொல்லையும் அதிகரித்துள்ளது. (71)